இந்திய உச்ச நீதிமன்றம்

[2021] 7 எஸ்.சி.ஆர்.649

2021 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு, எம்.ஆர். ஷா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருத்தா போஸ்

(உரிமையியல் மேல் முறையீடு எண் 5122/2021)

கர்நாடக கருவூல இயக்குனர் மற்றும் ஒருவர் ....மேல்முறையீட்டாளர்

–எதிர்–

வி . சௌம்யா ஸ்ரீ ..... எதிர்மேல்முறையீட்டாளர்

சேவைச் சட்டம் – கருணை அடிப்படையிலான பணி நியமனம் – முறையீடு – கர்நாடக குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையிலான பணி நியமனம்) விதிகள் 1996 – விதி 2 மற்றும் 3 – அசல் நீதிப்பேராணை மனுவின் மனுதாரரின் தாயார் கர்நாடக அரசில் இரண்டாம் பிரிவு நிலை உதவியாளராக பணிபுரிந்தார்– அவர் 25.03.2012 அன்று இறந்து விட்டார்– அவரது இறப்பிற்கு பிறகு அவரது மகள்/அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் பிரிவு 13B, இந்து திருமண சட்டம் 1955–ன் கீழ் பரஸ்பர சம்மதத்தின் பேரிலான மண முறிவிற்காக நடவடிக்கைகளை தொடங்கினார்– அவர் 20.03.2013, அன்று பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையிலான மண முறிவு தீர்ப்பாணை பெற்றார் – 21.03.2013 அன்று அசல் நீதிப்பேராணை மனுவின் மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கேட்டு மனு அளித்தார் – அவரது மனு நிராகரிக்கப்பட்டது – கர்நாடக மாநில நிர்வாக தீர்ப்பாயமும் அவரது மனுவை தள்ளுபடி செய்து விட்டது – அவ்வாறிருப்பினும் உயர் நீதிமன்றம், இம் மேல் முறையீட்டாளர் அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் கொடுத்த கருணை அடிப்படையிலான உத்தரவிட்டது – உயர்நீதிமன்றம் தன் உத்தரவில் மணமுறிவு பெற்ற மகள் என்பவர் திருமணமாகாத மகள் அல்லது விதவை மகள் ஆகியோரின் சட்ட தகுதிநிலையை ஒத்த தகுதி நிலை வகுப்பில் வருபவர் என தெரிவித்திருந்தது – மேல் முறையீடு – நடைபெற்றது விதி 2 மற்றும் 3 ன் படி திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள் மட்டுமே இறந்து போன பெண் அரசு ஊழியரின் இறப்பின் பொழுது அவரை முழுவதும் சார்ந்திருப்பின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற தகுதியுடையவர் என உள்ளது – விதி 2 மற்றும் விதி 3 ன் படி மணமுறிவு பெற்ற மகள் கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற

அவர் இறந்த அரசு பெண் ஊழியரை சார்ந்திருப்பினும் தகுதி பெற்றவராக சேர்க்கப்படவில்லை – மணமுறிவு பெற்ற மகள் என்ற சொல் 2021 ல் ஏற்பட்ட சட்டத்திருத்ததின் படி பின்னர் சேர்க்கப்பட்டுள்ளது – எவ்வாறிருப்பினும் இந்த வழக்கில் அந்த தொடர்புடைய நேரத்தில் அரசு பெண் ஊழியர் இறந்த பொழுதும் மற்றும் அசல் நீதிப்பேராணை மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கேட்டு மனுத்தாக்கல் செய்த பொழுதும் 'மணமுறிவு பெற்ற மகள்' கருணை அடிப்படையில் பணி நியமனம் சேர தகுதி பெறவில்லை மற்றும் விதவை மகள் சார்ந்திருப்பவர்' என்ற வரையறைக்குள் வரவில்லை – மேலும் வரிசைக்கிரமமான தேதிகள் மற்றும் நிகழ்வுகளின் படி 20.03.2013 அன்று பரஸ்பர சம்மதத்தின் பேரிலான மணமுறிவு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது மற்றும் 21.03.2013 அன்று பணி நியமனம் கோரும் மனு அளிக்கப்பட்டுள்ளது என்பது கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோருவதற்காக மட்டுமே பரஸ்பர சம்மத மணமுறிவு பெறப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது – பெண் அரசு ஊழியர் இறந்தபொழுது, மனுதாரர் திருமணமான மகள் என்பதால் பிரிவு 2, 1996 விதிகள் படி சார்ந்திருப்பவர் என்ற வரையறைக்குள் வருவதாக கருத முடியாது – ஆகையால் வழக்கு பொருண்மை மற்றும் சூழல் ஆகியவற்றை பரிசிலனை செய்யும் பொழுது உயர்நீதிமன்றம் இவ்வழக்கின் எதிர் மனுதாரர் கொடுத்த விதவை மகள் என்பதால் கருணை அடிப்படையிலான பணிநியமனம் கோரிய மனுவை பரீசிலிக்க இம் மேல் முறையீட்டாளருக்கு எதிராக உத்தரவிட்டிருக்க கூடாது – ஆகையால் உயர் நீதிமன்றம் பிறப்பித்த குறைபாடுடைய தீர்ப்புரை உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு இரத்து செய்யப்படுகிறது. மேல் முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

இந்நீதிமன்றத்தின் தீர்வு; 1.**என்.சி சந்தோஷ்** என்ற வழக்கின் தீர்ப்புரையை இவ்வழக்கின் பொருண்மைகளுடன் பொருத்திப் பார்க்கும் பொழுது, உயர்நீதிமன்றம் பிரிவு 2 மற்றும் பிரிவு 3 கர்நாடகா குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையிலான பணி நியமனம்) விதிகள், 1996 ன் வரம்பிற்கு அப்பாற்பட்டு, இம் மேல் முறையீட்டு எதிர் மனுதாரர் 'விதவை மகள்' என்ற தகுதி அடிப்படையில் கொடுத்த கருணை அடிப்படையிலான பணி நியமன மனுவை பரிசிலிக்க உத்தரவிட்டுள்தாக இந் நீதிமன்றம் கருதுகிறது. (பத்தி 8) (656– G–H)

2. விதி 2 மற்றும் விதி 3 ன் படி ' திருமணமாகாத மகள்' மற்றும் ' விதவை மகள்' ஆகியோர் இறந்து போன பெண் அரசு ஊழியர் இறக்கும் பொழுது, அவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்திருப்பின் சார்ந்திருப்பவர் என கூறப்பட்டுள்ளது மற்றும் திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள் ஆகியோர் மட்டுமே அரசு பெண் ஊழியர் இறக்க நேரிடும் பொழுது கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற தகுதியுடையவராகிறார். விதி 2 மற்றும் விதி 3 மேற் சொன்னவாறு' மணமுறிவு பெற்ற மகள் சார்ந்திருப்பவராயினும் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதியுடையவராக உள்ளடக்கம் கொண்டிருக்கவில்லை. மேலே கண்டறிந்தவாறும் மற்றும் இந்நீதிமன்றத்தின் என்.சி. சந்தோஷ் வழக்கில் ஏற்பட்ட வலியுறுத்தப்பட்ட நெறிகளின் படியும் மனுவின் பரீசிலனைத் தேதி என்பது கருணை அடிப்படையிலான பணி நியமனம் குறித்ததாகவே இருக்க வேண்டும், 'மணமுறிவு பெற்ற மகள்' என்ற சொல் திருத்தச் சட்டம் 2021 ன் படி பின்னரே சேர்க்கப்பட்டுள்ளது. ஆகையால் அந்த பொருத்தப்பாடுடைய நேரத்தில் அரசு பெண் ஊழியர் இறந்திருக்கும்

பொழுதும் மற்றும் அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கேட்டு மனுத் தாக்கல் செய்த பொழுதும் 'விதவை மகள்' கருணை அடிப்படையில் பணி நியமனம் கோர தகுதி பெறவில்லை மற்றும் 'விதவை மகள்' என்பவர் 'சார்ந்திருப்பவர்' என்ற வரையறைக்குள் வரவில்லை. (பத்தி 8.1) (658–A–D)

3. மேற்சொன்னதைத் தவிர, மேலும் கூடுதலான ஒரு முக்கிய கூற்றை உயர் நீதிமன்றம் பரீசிலிக்க தவறியுள்ளது. இறந்து போன அரசு ஊழியர் 25.03.2012 அன்று காலமானார் என்பது கவனிக்கத்தக்கது – இம் மேல்முறையீட்டு எதிர் மனுதாரர் மற்றும் அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் அந்தத் தருணத்தில் திருமணமான மகளாவார் – அவரது திருமணம் இறந்து போன அரசு பெண் ஊழியர் இறந்த தேதியான 25.03.2012 அன்று இரத்து செய்யப்படாமல் அமலில் இருந்துள்ளது. இறந்து போன அரசு பெண் ஊழியர் இறந்தவுடனேயே, இந்த எதிர்மனுதாரர் 12.09.2012 அன்று பிரிவு 13–பி, இந்துத் திருமணச் சட்டத்தின் கீழ் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையிலான மணமுறிவு கோரி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார். முதன்மை உரிமையியல் நீதிபதி, மாண்டியா 20.03.2013 தேதியிட்ட தீர்ப்புரையின்படி பரஸ்பர சம்மதத்தின் படியான மணமுறிவு வழங்கியுள்ளார். உடனடியாக அடுத்த நாளே, அதாவது 21.03.2013 அன்று இந்த எதிர் மனுதாரர் அந்த பரஸ்பர சம்மதத்தின்படியான மணமுறிவு தீர்ப்பாணையின் அடிப்படையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட வரிசைக்கிரமமான தேதிகள் மற்றும் நிகழ்வுகளின் படி கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெறும் நோக்கத்தின்

அடிப்படையிலேயே பரஸ்பர சம்மதத்துடன் பேரிலான மணமுறிவு பெறப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. வேறுவகையில் திருமணமான மகள் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற அருகதையற்றவர். ஆகையால் மேற்சொன்ன பொருண்மைகள் மற்றும் சூழல்கள் ஆகியவற்றை பார்வையிடும்பொழுது, உயர்நீதிமன்றம் மேல் முறையீட்டாளருக்கு எதிராக, இந்த மனுவின் எதிர் மனுதாரர் கொடுத்த கருணை அடிப்படையிலான 'மணமுறிவு பெற்ற மகள்' என்ற தகுதியில் பணி நியமனம் கோரிய மனுவை பரீசிலிக்க உத்தரவிட்டிருக்கக் கூடாது. இந்த ஒரு கூடுதல் காரணத்தின் அடிப்படையிலும் எதிர்மனுதாரரின் பணிநியமன மனுவை நிராகரித்திருக்க வேண்டும். (பத்தி 8.2) (658– E–H)) (659–A–B)

4. வேறு எவ்வாறிருப்பினும், இறந்து போன அரசு ஊழியர் காலமான 25.03.2012 அன்று எதிர்மனுதாரருக்கும், அவரது கணவருக்கும் இடையே நடைபெற்ற திருமணம் இரத்துச் செய்யப்படாமல் அமலில் இருந்துள்ளது என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. ஆகையால் இறந்து போன பெண் அரசு ஊழியர் இறந்தப் பொழுது, எதிர்மனுதாரர் திருமணமான மகளாவார் என்பதுடன் ஆகையால் விதி 2, 1996 விதிகள் படி ' சார்ந்திருப்பவர்' என்ற வரையறைக்குள் வரமாட்டார். ஆகையால் எதிர் மனுதாரரை 'மணமுறிவு பெற்ற மகள்' என்று ஒரே நிலையில் வைத்து, அனுமானம் மேற்கொண்டாலும், இறந்து போன பெண் அரசு ஊழியர் இறந்த தேதியில்

அவர் மண முறிவு பெற்ற மகள் இல்லை. ஏனெனில் எதிர் மனுதாரர் இறந்து போன பெண் அரசு ஊழியர் இறந்தப் பிறகே பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் மணமுறிவு பெற்றுள்ளார். ஆகவே எதிர் மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோர, அவரது தாயார் இறந்து போன நிலையில் தகுதி பெற்றவர் கிடையாது. (பத்தி 8.3) (659–B–D).

என்.சி. சந்தோஷ் (எதிர்) கர்நாடக மாநிலம் மற்றும் பலர் (2020) 7 S.C.C. 617; (2020) S.C.R. 1177– சார்வுறப்பட்டது.

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

(2020) 3 S.C.R. 1177 சார்வுறப்பட்டது பத்தி 5.7

உரிமையியல் மேல் முறையீட்டு அதிகார வரம்பு.

உரிமையியல் மேல்முறையீட்டு எண்; 5122/2021.

மாண்புமிகு கர்நாடகா உயர்நீதிமன்றம், பெங்களூரூவின் நீதிப் பேராணை மனு எண் 5609/2017 (எஸ்– கர்நாடகா) மனுவில் ஏற்பட்ட 17.12.2018 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு.

வி.என். இரகுபதி,

முகமது அப்சல் அன்சாரி,

வழக்கறிஞர்கள் – மேல்முறையீட்டாளர்களுக்காக

–எதிர்–

முகமது இர்ஷாத் ஹனீப்,

ரிஷ்வான் அஹமது,

முஜாகித் அஹமது,

முகமது அஸ்லாம்,

அஹமது பர்வேஷ்,

ஷீஷிர் ராஜ், வழக்கறிஞர்கள் –எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

இந்த தீர்ப்புரை மாண்புமிகு **நீதியரசர். திரு. எம். ஆர். ஷா** அவர்களால் பகரப்பட்டது.

1. இந்த மேல்முறையீட்டின் எதிர் மனுதாரர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எண் 5609/2017 மனுவில் மாண்புமிகு கர்நாடகா உயர்நீதிமன்றம் 17.12.2018 அன்று பிறப்பித்த, கர்நாடகா மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் பெங்களூரு, மனு எண்; 6396/2015 ல் பிறப்பித்த 09.12.2015 தேதியின் உத்தரவை இரத்து செய்தும் உடனிணைந்து அம்மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர் பரிசீலிக்க வேண்டுமென்று கொடுத்த உத்தரவிலும் குறைவுற்ற மேல் முறையீட்டாளர் இம் மேல் முறையீட்டை தாக்கல் செய்துள்ளார் – அசல் நீதிப்பேராணை மனுதாரர் (இதன் பிறகு அசல் மனுதாரர் எனக் குறிப்பிடப்படுவார்). அசல்

நீதிப்பேராணை மனுவின் எதிர்மனுதாரர் இம்மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளார்.

2. இம் மேல் முறையீட்டின் சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு;

அசல் நீதிப்பேராணை மனுவின் மனுதாரரின் தாயார் திருமதி. பி. பாக்யம்மா என்பவர் கர்நாடக மாநில அரசில், மாண்டியா மாவட்ட கருவூலத்தில் இரண்டாம் நிலை உதவியாளராக பணிபுரிந்தார். அவர் 25.03.2012 அன்று காலமானார். அந்தத் தருணத்தில் அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் திருமணமான மகள் அவர் பிரிவு 13 பி இந்து திருமண சட்டம் 1955 ன் படி பரஸ்பர சம்மதத்தின் பேரிலான மணமுறிவு கோரி 12.09.2012 அன்று மணமுறிவு நடவடிக்கைகளைத் தொடங்கினார். மாண்புமிகு முதன்மை முதுநிலை உரிமையியல் நீதிபதி, தலைமை குற்றவியல் நடுவர், மாண்டியா அவர்கள் 20.03.2013 தேதிய தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் படி பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் மணமுறிவு வழங்கினார். அதற்கடுத்த மறுநாள் 21.03.2013 அன்று அசல் நீதிப் பேராணையின் மனுதாரர் தனது தாயாரின் இறப்பின் காரணமாக கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு தாக்கல் செய்தார். அந்த மனு, விதி 3(2) (ii) கர்நாடகா குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையிலான பணி நியமனம்) விதிகள் 1996 (இதன் பிறகு விதிகள் 1996 எனக் குறிப்பிடப்படும்)–ன் படி மண முறிவு பெற்ற மகளுக்கு பணி நியமனம் செய்ய வரையறைகள் இல்லையென்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது. அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் கர்நாடக மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்திற்கு முன்பாக மனு எண்; 6396/2015 ஜ, அவரது கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரிய மனு நிராகரிக்கப்பட்ட

பிறகு ஏறத்தாழ 2 வருடம் கழித்து, 20.07.21015 அன்று தாக்கல் செய்தார். மாண்புமிகு தீர்ப்பாயம் 09.12.2015 தேதியை உத்தரவின் படி, மணமுறிவு பெற்ற மகள் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோர விதிகளில் இடமில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் மேற்படி மனுவைத் தள்ளுபடி செய்தது. அதன்பிறகு அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் மேற்படி 09.12.2015 தேதிய மாண்புமிகு நிர்வாகத் தீர்ப்பாயம், பெங்களூரு வழங்கிய உத்தரவினை எதிர்த்து உயர் நீதிமன்றத்தை அணுகினார்.

3. மாண்புமிகு உயர்நீதிமன்றம் 17.12.2018 அன்று பிறப்பித்த தீர்ப்புரையின் படி, நீதிப் பேராணை எண் ; 5609/2017 ஜ அனுமதித்தும் மாண்புமிகு கர்நாடக நிர்வாகத் தீர்ப்பாயம் 09.12.2015 தேதியில் வழங்கிய மனு எண் ; 6393/2015 உத்தரவை இரத்து மற்றும் நீக்கறவு செய்தும், இம் மேல் முறையீட்டாளர் அசல் நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் கொடுத்த கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரிய மனுவை, உயர் நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் உத்தரவில் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பரீசிலிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டது. மேற்படி குறைபாடுடைய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் உத்தரவில் விதி 3, விதிகள் 1996 க்கு பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டு, அதில் மணமுறிவு பெற்ற மகள் என்பவர் திருமணமாகாத மகள் அல்லது விதவை மகள் என்பவர்களோடு ஒரே வகுப்பில் வருகிறார்கள் என்றும் ஆகையால் மணமுறிவு பெற்ற மகள் என்பவர் திருமணமாகாத மகள் அல்லது விதவை மகள் ஆகியோரோடு சமநிலையில் வைத்து பரீசிலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

3.1 மாண்புமிகு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புரை மற்றும் உத்தரவில் குறைவுற்ற இம் மேல் முறையீட்டாளர்கள் இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

4. திரு. வி.என். இரகுபதி, மாநில அரசுத் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழலின்படி, மாண்புமிகு உயர்நீதி மன்றம், மாண்புமிகு தீர்ப்பாயத்தின் உத்தரவை நீக்கறவுச் செய்து, முக்கிய கருப் பொருள் பிழை ஏற்படுத்தியுள்ளது என்றும் மேல் முறையீட்டாளரை நீதிப் பேராணை மனுவின் மனுதாரர் கொடுத்த கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரிய மனுவை பரீசிலிக்க பிழையாக உத்தரவிட்டுள்ளது என்றும் ஆணித்தரமாக வாதுரைத்தார்.

4.1 நீதிப்பேராணை மனுவின் மனுதாரர் கொடுத்த கருணை அடிப்படையிலான பணி நியமனம் குறித்த மனுவினை பரீசிலனைச் செய்ய உயர்நீதி மன்றம் வழங்கிய வழிகாட்டுதல் விதி 3, விதிகள் 1996 ன் வரையறைகளுக்கு முரண்பட்டதென வாதுரை சமர்ப்பிக்கப்பட்டது. விதி 3 ன் படி திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள் மட்டுமே, பெண் அரசு பணியாளர் உயிரிழந்திருப்பின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற தகுதி மற்றும் அருகதையுடையவர் என வாதுரைக்கப்பட்டது.

விதிகள் –1996 ன் கீழ் விதி –

– 3(2) (ii) ன் படி' மணமுறிவு பெற்ற மகள்' பெண் அரசு பணியாளர் உயிரிழந்திருப்பின் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறவதற்கு தகுதி பெற்றவராக சேர்க்கப்படவில்லை என்று வாதுரைக்கப்பட்டது.

4.2 1996 விதிகள், விதி 2 ன் படி 'சார்ந்திருப்பவர்' என்பதற்கான வரையறையிலும் பெண் அரசு ஊழியர் இறந்திருப்பின் அவரது விதவை, மகன், (திருமணமாகாத மகள் அல்லது விதவை மகள்) ஆகியோர் இறந்தவரை சார்ந்திருப்பினும், அவருடன் இணைந்து வாழ்ந்து வந்திருப்பினும் 'சார்ந்திருப்பவர்' என கூறப்பட்டிருப்பதாக மேலும் வாதுரைக்கப்பட்டது, மண முறிவு பெற்ற மகள் சார்ந்திருப்பவராக வரையில் சேர்க்கப்படவில்லை எனவும் வாதுரைக்கப்பட்டது.

4.3 ஆகையால் உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதிர்மனுதாரரின் மணமுறிவு பெற்ற மகள் என்பதால் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரிய மனுவினை பரீசிலிக்க வழங்கிய வழி காட்டுதல் 1996 – விதிகள் படியான விதி 2 மற்றும் விதி 3 ஆகியவற்றின் வரையறைகளுக்கு அப்பாற்ப்பட்டது என வாதுரைக்கப்பட்டது.

4.4. எதிர்மனுதாரர், இறந்துபோன பெண் அரசு பணியாளர் இறக்கும் பொழுது முற்றிலும் அவரைச் சார்ந்திருந்ததாகவோ அல்லது அவருடன் ஒன்றாக வசித்து வந்ததாகவோ வேறு வகையில் நிரூபிக்க தவறியுள்ளார் என்றும் வாதுரை சமர்ப்பிக்கப்பட்டது.

4.5. மேலும் உயர்நீதிமன்றம், இறந்து போன பெண் பணியாளர் 25.03.2012 அன்று இறந்தார் என்ற சங்கதியையும் மற்றும் பின்னர் உடனடியாக 12.09.2012 அன்று எதிர்மனுதாரர் பிரிவு 13–பி இந்துத் திருமணச் சட்டம் –1955 ன் கீழ் மண முறிவிற்காக நடவடிக்கை மேற்கொண்ட சங்கதியையும் 20.03.2013 அன்று கருணை அடிப்படையில் அதற்கடுத்த நாளே, 21.03.2013 அன்று கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு தாக்கல் செய்த சங்கதியையும் முறையாக சீர்தூக்கிப் பார்க்காமல் கடும் பிழை புரிந்துள்ளதாக வாதுரைச் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்சொன்ன பொருண்மைகள் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறும் நோக்கத்தின் அடிப்படையிலேயே, எதிர் மனுதாரர் பரஸ்பர சம்மதத்தின் படியான மணமுறிவு பெற்றுள்ளார் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டும் என்று வாதுரைக்கப்பட்டது. மேற்சொன்ன சங்கதிகளை உயர்நீதிமன்றம் சரியாக பரீசிலனைச் செய்யவில்லை என்றும் வாதுரைக்கப்பட்டது.

5.7 மேல்முறையீட்டாளர் வாதுரைக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தின் என்.சி. சந்தோஷ் எதிர் கர்நாடக மாநில அரசு மற்றும் பலர் (2020) 7, எஸ்.சி.சி.617 என்ற முன்தீர்ப்பு நெறி எடுத்துக் காட்டப்பட்டு கருணை அடிப்படையிலான பணி நியமனம் அதன் படியான அமைப்பு மற்றும் கொள்கையின் படியே மேற்கொள்ள முடியும் என வாதுரைக்கப்பட்டது.

5.8 மேற்சொன்ன வாதுரைகளை சமர்ப்பித்து மேல்முறையீட்டை அனுமதிக்க பிரார்த்திக்கப்பட்டது.

6. இம் மேல் முறையீடு, எதிர்மனுதாரர் – அசல் நீதிப் பேராணை மனுதாரர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. முகமது இர்ஷாத் ஹனிப் அவர்களால் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது.

6.1 விதி 3 ன் படியான பொருள் விளக்கத்தைப் பற்றி உயர் நீதிமன்றம் வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலையை பரீசிலித்தும், 2000 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் படி விதி 3 திருத்தப்பட்டதற்கான நோக்கம் மற்றும் காரணம் ஆகியவற்றை பரீசிலித்தும் 'திருமணமாகாத மகள்' மற்றும் 'விதவை மகள்' ஆகிய பதங்கள் 'சார்ந்திருப்பவர்' என்பதற்குள் உள்ளடக்கமாக சேர்க்கப்பட்டுள்ளது என்று சரியான பொருள் விளக்கம் அளித்துள்ளதாக வாதுரைக்கப்பட்டது. சட்டமியற்றுபவர்களின் நோக்கம் பற்றி சரியாக கண்டறிந்து 'திருமணமாகாத மகள்' அல்லது 'விதவை மகள்' ஆகியோர்கள்' சார்ந்திருப்பவர்' என்ற வரையறைக்குள் வருவதாக சரியாக உயர்நீதிமன்றம் கண்டறிந்துள்ளதாக வாதுரைக்கப்பட்டது. மண முறிவு பெற்ற மகள் என்பவர் 'திருமணமாகாத மகள்' அல்லது 'விதவைமகள்' ஆகியோருடன் அதே வகுப்பில் வருவார் என உயர்நீதிமன்றம் சரியாக கண்டறிந்துள்ளதாக வாதுரைக்கப்பட்டது. விதிகள் 1996, விதி 3–க்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பொழுது உயர்நீதிமன்றம் குறிக்கோள், நோக்கம் பற்றிய அர்த்தத்தை எடுத்துக் கொண்டுள்ளதாக வாதுரைக்கப்பட்டது.

6.2. அதன் பின்னர், கர்நாடக குடிமை பணிகள் கருணை அடிப்படையிலான பணி நியமனம் (திருத்த விதிகள்.2021)ன் படி 'மணமுறிவு பெற்ற மகள்' பெண் பணியாளர் இறந்து போகும் பட்சத்தில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதி பெற்றவராகிறார் என்று வாதுரைக்கப்பட்டது. ஆகையால் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையின் படியான பொருள் விளக்கம் முழுவதும் சரியானது ஏனெனில் திருத்த விதிகள் 2021–ன் படி தற்பொழுது மணமுறிவு பெற்ற மகளும், பெண் அரசு பணியாளர் இறக்க நேர்ந்தால், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதி பெற்றவராகிறார்.

6.3 மேற் சொன்ன வாதுரைகளின் படி இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யப் பிரதிக்கப்பட்டது.

7. இரு தரப்பு வாதுரைகளை பரீசிலிக்கும்பொழுது இந்த நீதிமன்றத்தின் என்.சி.சந்தோஷ் (மேற்சொன்ன) வழக்கை, கருணை அடிப்படையிலான பணி நியமனம் குறித்து பரிசிலிப்பதும் அவசியம்.

இந்நீதிமன்றத்தில் பல முன்தீர்ப்பு நெறிகளின் தொகுப்பை பரீசிலித்துப் பார்த்தபிறகு மாநில அரசு பொது பணிகள் சம்பந்தப்பட்ட பணி நியமனம் என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 14 மற்றும் 16 ஆகியவற்றின் வரையறைகளின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும் என்று வழிகாட்டுதல் வழங்கப்பட்டிருப்பதை கண்டறிய முடிகிறது மற்றும் கருணை அடிப்படையிலான பணி நியமனம் என்பது மேற்படி பொது விதிக்கு விலக்களிக்கப்பட்டதாகும். மேலும் இறந்து போன அரசு ஊழியரை

சார்ந்திருப்பவர், கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற அதற்குரிய தகுதி பெற்றிருப்பவராகவும், அந்த பணி நியமனம் பெறுவதற்குரிய அரசு வகுத்துள்ள கொள்கையின்படி உரிய தகுதி பெற்றவராக இருக்க வேண்டும் என்பதையும் கண்டறிய முடிகிறது. மேலும் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரிய மனு பரீசிலிக்கப்படும் தேதியன்று மேற்படி பணி நியமனம் பெற கோரியவர் உரிய வரையறுக்கப்பட்ட தகுதியை கட்டாயமாக பெற்றிருக்க வேண்டும் என்பதையும் கண்டறிய முடிகிறது. இறந்த போன அரசு ஊழியரைச் சார்ந்திருப்பவர், அந்த அரசு ஊழியரின் இறப்பின் காரணமாக எந்தவித சேர்ந்தடை உரிமையை பெற்றிராத நிலையில், தங்களது கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் மனுவை பரீசிலிக்க வேண்டுமென்று மட்டுமே கோர முடியும். எவ்வாறிருப்பினும் பணி நியமனம் கோருபவர், தனது மனுவை, இறந்து போன அரசு ஊழியர் இறந்த தேதியன்று உள்ள தகுதிநிலை அடிப்படையில் மட்டுமே பரீசிலிக்கக் கோர உரிமையுடையவர் என்பதை முன் தீர்ப்பு நெறிகள் வாயிலாக கண்டறிய முடிகிறது. இந்நீதிமன்றத்தின் மேற் சொன்ன முன் தீர்ப்பு நெறிகள் மூலம் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற வகுத்துள்ள வழிகாட்டுதல்களின் சுருக்கம் பின்வருமாறு;

(i) கருணை அடிப்படையிலான பணி நியமனம் என்பது பொது விதிகளுக்கு விலக்கமளிக்கப்பட்டதாகும்.

(ii) கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை, ஆர்வலர் எவரும் உரிமையாக கேட்க முடியாது.

(iii) அரசின் பொது பணிகள் சம்பந்தப்பட்ட பணி நியமனம் எதுவும் ஷரத்து 14 மற்றும் 16, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகையங்களின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

(iv) கருணை அடிப்படையிலான பணி நியமனம், அரசு வகுத்துள்ள தகுதிக்கான வரைமுறைகள் மற்றும் மேற்படி அரசால் வகுக்கப்பட்டுள்ள தகுதியை முழுவதுமாக பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

(v) கருணை அடிப்படையிலான பணி நியமனம் என்பது அந்த மனு பரீசிலனை செய்யும் தேதியில் வரையறுக்கப்பட்ட தகுதிகளை பெற்றிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

8. உச்சநீதிமன்றம் வகுத்துள்ள முன்தீர்ப்பு நெறிகளை, இந்த வழக்குடன் பொருத்திப் பார்க்கும் பொழுது, உயர்நீதிமன்றம் 1996 விதிகள், விதி 2 மற்றும் 3 வரை முறைகளுக்கு அப்பாற்பட்டு எதிர் மனுதாரரை 'மணமுறிவு பெற்ற மகள்' என்ற அடிப்படையில் அவரது கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரும் மனுவை பரீசிலிக்க, மேல் முறையீட்டாளருக்கெதிராக உத்தரவிட்டிருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

1996–விதிகள், விதி 2 மற்றும் 3 பின்வருமாறு :

"2. Definitions;– (1) இந்த விதிகளில், தறுவாயின் தேவை வேறானலன்றி,:

(அ) இறந்து போன அரசு ஊழியரின் சார்ந்திருப்பவர் என்பது ;–

(i) இறந்து போனவர் ஆண் அரசு ஊழியரெனில், அவரது விதவை மனைவி, மகள், (திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள்) ஆகியோர் அவரை சார்ந்திருப்பவர்கள் மற்றும் அவருடன் வாழ்ந்தவர்கள் மற்றும்

(ii) இறந்து போனவர் பெண் அரசு ஊழியரெனில், அவரது கணவர், மகள், (திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள்) ஆகியோர் அவரை சார்ந்திருப்பவாக்ள் மற்றும் அவருடன் வாழ்ந்தவர்கள்

(iii) 'குடும்பம்' என்பது இறந்துபோன அரசு ஊழியரின் தொடர்புடைய அவர்களது வாழ்க்கைத் துணை மற்றும் அவர்களது மகன் (திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள்) ஆகியோரில் அவருடன் வாழ்ந்து வந்தவர்கள் ஆகியோரைக் குறிக்கும்.

(2) மேற்படி உபயோகப்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மற்றும் அதன் அர்த்தம் வெளிப்படையாக வரையறுத்து சொல்லப்படாவிடினும், அவை "கர்நாடகா குடிமை பணிகள் (பொது

நியமனம்) விதிகள். 1977'–ன் வரையறைகளுடன் ஒத்த அர்த்தமையே கொண்டுள்ளன.

6. கர்நாடகா குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையிலான பணி நியமனம்) விதிகள்–1996, விதி 3(2) (ii)–ன் படி இறந்து போனவர் பெண் அரசு ஊழியரெனில் பணி நியமனம் பெறுவதற்கான தகுதிபெற்றவர்கள் பின்வருமாறு:–

விதி3 (2) (ii):–

(ii) பெண் அரசு ஊழியர் இறந்திருப்பாரெனில்;

(அ) மகன்;

(ஆ) திருமணமாகாத மகள், மகன் தகுதிபெற வில்லையென்றாலோ அல்லது வேறு ஏதேனும் தகுந்த காரணங்களின் அடிப்படையில் அந்த பணி நியமனத்தை மகன் விரும்பாத தருணங்களின் பொழுதோ;

(இ) கணவன், மகன் மற்றும் மகள் தகுதி பெறாமலிருந்தாலோ அல்லது வேறு ஏதேனும் தகுந்த காரணங்களின் அடிப்படையில் அவர்கள் பணி நியமனத்தை விரும்பவில்லையென்றாலோ,

(ஈ) விதவை மகள், கணவனோ, மகன் அல்லது திருமணமாகாத மகளோ தகுதி பெறாமலிருந்தாலோ அல்லது வேறு ஏதேனும் தகுந்த காரணங்களின் அடிப்படையில் அவர்கள் பணி நியமனத்தை விரும்பவில்லையென்றாலோ;

3.'XXX'

4.'XXX"

8.1. மேற்கண்ட விதிகளின்படி, திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள் ஆகியோர் மட்டுமே, பெண் அரசு ஊழியரைச் சார்ந்திருப்பின் மற்றும் அவருடன் வாழ்ந்து வந்திருப்பின் இறந்து போன அரசு பெண் ஊழியரைச் 'சார்ந்திருப்பவர்' என்றும் மற்றும் அந்த திருமணமாகாத மகள் மற்றும் விதவை மகள் மட்டுமே பெண் அரசு ஊழியர் இறக்க நேரிடும் பொழுது கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதியுடையவர்கள் என்றும் காணமுடிகிறது. மேற்கண்ட விதி 2 மற்றும் விதி 3 'மணமுறிவு பெற்ற மகளை' அவர் சார்ந்திருப்பவராயினும், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதியுடையவராக சேர்க்கவில்லை.

மேற்சொன்ன கண்டறிதலின்படியும், இந்நீதிமன்றத்தின் என்.சி.சந்தோஷ் வழக்குத் தீர்வின் படியும் கருணை அடிப்படையிலான பணி நியமனம் என்பது அந்த பணி நியமனம் குறித்த கோரிக்கை மனு பரீசிலிக்கப்படும் தேதியன்று வற்புறுத்தப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும், 'மணமுறிவுபெற்ற மகள்' என்பது திருத்தச் சட்டம் – 2021 ன் மூலம் பின்னரே சேர்க்கப்பட்டுள்ளது. ஆகையால் இறந்து

போன பெண் அரசு ஊழியர் காலமான தொடர்புடைய தேதியில், அசல் நீதிப் பேராணை மனுதாரர்/ மேல்முறையீட்டு எதிர்மனுதாரர் 'மணமுறிவு பெற்ற மகள்' என்ற அடிப்படையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதியற்றவர் மற்றும் ' மணமுறிவு பெற்ற மகள்' ' சார்ந்திருப்பவர்' என்ற வரையறையின் கீழ் வரவில்லை.

8.2 மேற்சொன்ன காரணங்கள் தவிர, மேலும் ஒரு முக்கிய காரணத்தை உயர்நீதிமன்றம் பரீசிலிக்க தவறியுள்ளது. இறந்து போன அரசு ஊழியர் 25.03.2012 அன்று இறந்துள்ளார் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. இம்முறையீட்டின் எதிர்மனுதாரர் மற்றும் அசல் நீதிப் பேராணை மனுதாரர் அந்த தருணத்தில் திருமணமான மகளாவார். அவரது திருமணம், இறந்து போன அரசு ஊழியர் இறந்த தேதியான 25.03.2012 அன்று இரத்து செய்யப்படாமல் அமலில் உயிர்ப்புடன் இருந்துள்ளது. இறந்துபோன அரசு ஊழியர் இறந்த உடனேயே, இம் மேல்முறையீட்டு எதிர்மனுதாரர் பிரிவு 13 பி, இந்து திருமணச் சட்டம் 1955 ன் கீழ் பரஸ்பர சம்மதத்துடன் கூடிய மணமுறிவு பெற 12.09.2012 அன்று நடவடிக்கைளை தொடங்கியுள்ளார். கற்றறிந்த முதன்மை உரிமையியல் நீதிபதி மாண்டியா, 20–03–2013 தேதிய தீர்ப்புரையின்படி பரஸ்பர சம்மதத்தின் பேரிலான மண முறிவு வழங்கியுள்ளார். அதற்கடுத்த மறுநாளே 21.03.2013 அன்று எதிர்மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி, பரஸ்பர சம்மதத்தின் பேரில் மணமுறிவு பெற்றுள்ளதைக் காட்டி மனுத் தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன வரிசைக்கிரமமான தேதிகள் மற்றும் நிகழ்வுகள், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறும் ஒரே நோக்கத்தோடு, பரஸ்பர சம்மதத்தின் பேரில் மண முறிவு பெற்றுள்ளதை

சுட்டிக் காட்டுகிறது. இல்லையெனில் திருமணமான மகள், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோர தகுதியில்லை. ஆகையால் மேற்சொன்ன வழக்குப் பொருண்மைகள் மற்றும் சூழல் ஆகியவற்றை பார்வையிடும் பொழுது, உயர்நீதிமன்றம், எதிர் மனுதாரரின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரும் மனுவை 'மணமுறிவு பெற்ற மகள்' என்ற அடிப்படையில் மேல்முறையீட்டாளர் பரீசிலிக்க உத்தரவிட்டிருக்கக் கூடாது. இந்த ஒரு கூடுதல் காரணத்தின் பேரிலும் எதிர்மனுதாரரின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரும் மனு நிராகரிக்கத்தக்கது.

8.3. இறந்து போன அரசு ஊழியர் 25.03.2012 அன்று இறந்த பொழுது, எதிர் மனுதாரர் மற்றும் அவரது கணவர் ஆகியோருக்கிடையேயான திருமண பந்தம் உயிர்ப்புடன் இருந்துள்ளதென்பது கூர்ந்து கவனிக்க வேண்டியதாகும். ஆகையால் விதிகள் 1996, விதி 2 ன் படி அரசு ஊழியர் இறந்து போன அன்று எதிர்மனுதாரர் திருமணமான மகள் மற்றும் சார்ந்திருப்பவர்' இல்லை. ஆகையால் 'மணமுறிவு பெற்ற மகள்' என்பவரை திருமணமாகாத மகள்' மற்றும் 'விதவை மகள்' ஆகியோரோடு ஒரே சம வகுப்பில் வைத்து அனுமானம் மேற்கொண்டாலும், எதிர்மனுதாரர், அரசு ஊழியர் இறந்த தேதியன்று மணமுறிவு பெற்ற மகள் இல்லை; ஏனெனில் அரசு ஊழியர் இறந்த பிறகே பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் மணமுறிவு பெற்றுள்ளார். ஆகையால் இம்மேல்முறையீட்டு எதிர்மனுதாரர், அவரது தாயார்/இறந்து போன அரசு ஊழியரின் இறப்பின் காரணமாக, கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதி பெறவில்லை.

9. மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில், இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் நீதிப் பேராணை மனு எண்:5609/2017–ன் குறைபாடுடைய தீர்ப்புரை மற்றும் உத்தரவு இரத்து செய்யப்பட்டு நீக்கறவும் செய்யப்படுகிறது. மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் முன்புள்ள நீதிப்பேராணை மனு அவ்வகையில் தள்ளுபடிச் செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவேதுமில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."